கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்

**O.S.No.47/2016**

PW - 1

2023 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 23 ஆம் நாள் வியாழக்கிழமை (1989 ஆம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.கே.ராஜசேகர், பி.காம்., பி.எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | பாலமுருகன் |
| தந்தை/கணவர் பெயர் | |
| வயது | |
| முகவரி | |

**முதல் விசாரணை**

நான் வாதி நிறுவனமான M/s.Indmax IT Services Private Ltd., தனியார் நிறுவனத்தில் Service Delivery Manager ஆக பணியாற்றி வருகிறேன். எனது தரப்பு சாட்சியத்தை நான் சத்தியப்பிரமாணமாகத் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேலும் எனது சாட்சியத்தை உறுதிபடுத்துவதற்காக ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவற்றை குறியீடு செய்யுமாறு கோருகிறேன். 29.4.2015 ம்தேதியிட்ட வாதி நிறுவனம் சார்பாக கொடுத்த தீர்மானத்தின அலுவலக நகல் வதசாஆ.1, நஷ்ட தொகைக்குரிய விபர பட்டியல் வதசாஆ.2, 4.10.2015 ம் தேதிமயிட்ட கணக்கு பட்டியல் அலுவலக நகல் வதசாஆ.3, மின் அஞ்சல் தொடர்பு விவரங்கள்அலுவலக நகல் வதசாஆ.4, பிரதிவாதி வாதி நிறுவனத்தில் செய்த வேலை விவரம் அலுவலக நகல் வதசாஆ.5, 4.12.2014 ம் தேதியிட்ட சேவை ஒப்பந்தம்

அலுவலக நகல் வதசாஆ.6, 7.3.2015ம்தேதியிட்ட மின் அஞ்சல் தகவல் வதசாஆ.7, 20.4.2015ம் தேதியிட்ட வாதி நிறுவனம் பிரதிவாதி நிறுவனத்திற்கு அனுப்பி வைத்த நினைவூட்டல் வதசாஆ.8 ஆக குறியிடப்படுகிறது.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

வேண்டுகோளின்படி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/பாலமுருகன்

ஒம்/கே.ராஜசேகர்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கோயமுத்தூர்